முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 23.02.2026

O.S No. 324/2017

வா.சா.1- வைகுண்ட வாசகம்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

எல்லையை நிர்ணயம் செய்ய நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரி. ஒரு ஏக்கர் 97 சென்ட்டில் மேற்கணைய பாதி பகுதியில் தெற்கணய பகுதியை நிர்ணயம் செய்து கேட்கிறேன் என்றால் சரி. ஒரு ஏக்கர் 97 சென்ட்டில் மேற்கணைய பகுதியில்தெற்கணைய பகுதியை நான் மட்டுமே நிர்ணயம் செய்ய கேட்டுள்ளேன் என்றாலும் மற்ற நபர்களை நான் சேர்க்கவில்லை என்றால் சரி. அது எனக்குரிமை பட்ட பகுதி அதனால் நான் மட்டுமே கேட்டுள்ளேன். அந்த இடத்தை தனியாக என் பெயருக்கு உட்பிரிவு செய்து தனிப்பட்டா வாங்கவில்லை என்றால் சரி. தனிப்பட்டா வாங்குவதற்கு நான் மனு கொடுத்துள்ளேனா என்றால் இனிமேல் தால் மனு செய்ய வேண்டும். நாளதி தேதி வரை சட்டப்படி பரிகாரத்தை நான் தேடி கொள்ளவில்லை என்றால் சரி. என்னுடைய இடத்திற்கு தெற்கு பக்கம் இடுவையாக இருந்தது ரோடாக மாறியிருக்கிறது என்றால் சரியல்ல ஆரம்பத்தில் இருந்தே ரோடு தான். வா.சா.ஆ.1 உயிலில் தெற்கு எல்லையில் இடுவை என்று சொல்லப்பட்டுள்ளதென்றால் சரி. எனவே ஆரம்பத்தில் இருந்தே ரோடு என சொல்வது தவறு என்றால் சரியல்ல.. வா.சா.ஆ.1,1995 ல் எழுதப்பட்டதென்றால் சரி.

வா.சா.ஆ.1 ல் நான்கு பக்கம் எல்லையில் கல்கட்டோ காம்பவுண்ட் சுவரோ வேலியோ உள்ளதாக சொல்லவில்லை என்றால் சரி. மரங்கள் நிற்பதாக சொல்லவில்லை என்றால் சரி. ஆனால் 1995 லேயே சர்வே எண்.188/2 ல் காய்தரும் பலாமரங்களும் தென்னைமரங்களும் நின்றன என்றால் சரி. அதனால் உயிலில் சொத்து விவரங்கள் சரியாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.188/2 ல் நிலத்தின் 4 பக்கமும் எல்லை கற்கள் உள்ளதா என்றால் என்னுடைய இடத்திற்கு உள்ளது பிரதியின் இடத்திற்கு இல்லை. எல்லை கற்கள் எப்போது போடப்பட்டது என்றால் வழக்கிற்கு முன்பாக போடப்பட்டது ஆண்டு நியாபகமில்லை. என்னுடைய பகுதியில் உள்ள நான்கு பக்க எல்லை கற்களுக்கும் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல -2---*---

வடக்கு தெற்கு மட்டுமே கிழக்கே எல்லை கல் உள்ளது மற்ற பகுதிக்கு பிரதி போடவிடவில்லை

188/2 ன் வடக்கணைய பகுதியில் எல்லை கற்கள் உள்ளதா என்பது எனக்கு தெரியாது. 188/2 ல் மொத்த இடத்திற்கும் எல்லை கற்கள் இருப்பதாக பொய் சொன்னேன் என்றால் சரியல்ல. தெற்கணைய பகுதியில் மேற்கணைய தென்வடலாக கால் ஒன்று இருப்பதாக உயிலில் சொல்லப்பட்டுள்ளதென்றால் சரி. அந்த காலுக்கு தண்ணீரானது கிழக்கில் இருந்து மேற்காக வந்து வடக்காக செல்கிறது என்றால் சரியல்ல. உயில்படி அந்த இடத்தில் கால் எதுவும் ஏற்படுத்தபடவில்லை என்றால் சரி. உயிலின் சரத்துக்களை நான் மீறியுள்ளதால் உயில்படி எனக்கு உரிமை எதுவும் கிடைக்காது என்றால் சரியல்ல. காலை எனது அப்பா உயிலில் சொல்லியுள்ளார் என்றாலும் நான் அதனை அழித்து விட்டு வழக்கிற்காக கால் இல்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அனந்தங்காலில் இருந்து கிழக்கு முக்கிய கால்வாயில் இருந்து உயிலில் சொல்லப்பட்ட காலுக்கு தண்ணீர் வருகிறது என்றால் சரியல்ல. முக்கிய கால்வாய் பள்ளப்பகுதி என்றாலும் எங்களது பகுதி மேட்டுபகுதி என்பதால் பள்ளத்தில் இருந்து மேட்டிற்கு தண்ணீர் வராது. வழக்கு சொத்து விவரத்தில் shrubs என்று வார்த்தைக்க என்ன அர்த்தம் என்றால் மேல்பக்கம் உள்ள சிறுசெடிகள் ஆகும்.

வழக்கு சொத்து என்பது மண்தட்டையும் நீளமான வேலி போன்ற அமைப்பு என்றால் சரியல்ல. செடிகொடிகள் அமைந்து உயிர்வேலியாக அமைந்த பகுதியாகும். மண்தட்டை கிடையாது. புகைப்படங்களை பார்த்தால் எனக்கு வழக்கு சொத்தை கண்டுபிடிக்க முடியுமா என்றால் முடியாது நான் இந்த வழக்கில் புகைபடத்தை போடவில்லை. புகைப்படம் எடுக்க ஆணையரிடம் கேட்டேனா என்றால் இல்லை. மண்தட்டை போன்ற இடத்திற்கு இருபுறமும் மஞ்சனத்தி, பூவரசு போன்ற மரங்கள் உள்ளதென்றால் சரி. எனது எல்லையில் உள்ளது. மண்தட்டை மஞ்சனத்தி செடிக்கு எந்த புரத்தில் உள்ளதென்றால் மண்தட்டையே இல்லை.நாளது வரை பிரிக்கப்படாமல் உள்ளதென்றால் சரி மரங்களை வைத்து நாங்கள் எல்லையாக வைத்துள்ளோம். வேறு எதுவும் வைக்கவில்லை. முட்செடிகள் வைத்து இருசொத்துக்களை

பிரித்ததாக பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. கற்றாழை செடியா என்றால் இல்லை சிறு சிறு முட்செடிகள் உள்ளது பெயர் எனக்கு தெரியாது. ஆணையர் அறிக்கையில் மண்தட்டை அமைப்பு இருப்பதாக கூறியுள்ளார் என்றால் சரி. அதை அவரிடம் தான் கேட்க வேண்டும்.

பழைய சர்வே எண்.443 ன் மொத்த பரப்பளவை அளவீடு செய்யாமல் ஆணையர் சர்வே எண்.188/2 ஐ மட்டும் அளவீடு செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய சொத்தின் வடகிழக்கிலும் மற்றும் தென்கிழக்கிலும் எல்லை கற்களை ஆதாரமாக வைத்து அளவீடு செய்ததாக ஆணையர் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. சர்வேயர் பிளானில் எல்லை கற்கள் இருப்பதாக காட்டவில்லை என்றாலும் உட்பிரிவு செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் வளைவுகள் ஏதும் இல்லாமல் நேர்கோடாக உள்ளதென்றால் சரி. ஆணையர் வரைபடத்தில் வளைந்து காணப்பட்டுள்ளதென்றால் சரி. ஆனால் அது தவறாக கூறப்பட்டுள்ளது. அவசிய தரப்பினர்களை கட்சி சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்கு எல்லையில் சரியான அமைப்புகளை குறிப்பிடாமல் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதியின் சொத்தில் கிழக்கு பக்கம் மண்தட்டை அமைப்பு இருப்பதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

சுமார் 300 மீட்டர் நீளத்திற்கு ஒருமீட்டர் அலவன்ஸ் எடுக்கலாம் என்றால் எனக்கு தெரியாது. முன்னால் லின்ஸ், மீட்டர் அளவுகள் எவ்வளவு என்பது தெரியுமா என்றால் தெரியாது பிராதில் அந்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லி இருப்பேன். பிரதி என் சொத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்பதற்கு விளம்புகை பரிகாரமோ மீட்பு பரிகாரமோ நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல அவர் ஆக்கிரமிக்க முயற்சி மட்டுமே செய்தார் ஆக்கிரமிப்பு செய்யயவில்லை. எல்லை நிர்ணயம் செய்யும் வழக்கில் தீர்ப்பிற்கு பின்பாக தான் ஆணையர் நியமிக்கபட வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. என் சொத்தின் மேற்கு எல்லை இன்ன விதத்தில் தான் இருந்தது என்பதற்கு புகைப்படமோ வேறு சாட்சியங்களோ நான் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரி. இது ஒரு சோதனை வழக்கு என்றாலும் பிரதியின் சொத்தை அபகரிக்க தாக்கல் செய்த வழக்கு என்றாலும் -3-

சரியல்ல.

நான் சட்டத்தை முழுமையாக தெரிந்த நபர் என்பதால் ஒன்றும் தெரியாத பாவபட்ட பிரதியை துன்புறுத்த இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ய எனக்கு எந்த வழக்கு மூலமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் வழக்கு பிரதியின் செலவு தொகையும் தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றாலும் சரியல்ல.